மங்கள வைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்,
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஸ்ரீ சித்திரை மீ 22 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 28 (05 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-127

# ஜனாதிபதி பிரேமதாஸவுடன் புலிகள் தூதுக்குழு சந்திப்பு

## இரு தரப்பினரும் தமது நிலைப்பாடுகளை மனம் திறந்து பரிமாறிக் கொண்டனர்

கொழும்பு, மே 5

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஐவர் கொண்ட பிரதிநிதிகள் குழு, நேற்று, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸவை மரியாதை முறையில் சந்தித்தது.**

**அந்தச் சந்திப்பின் போது, இரு தரப்பினரும் தமது நிலைப்பாடுகளை மனம் திறந்து பரிமாறிக் கொண்டனர்.**

அமைதியை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே தாம் எல்லோரையும் பேச்சுக்கு அழைத்ததாகவும் —

கலந்துரையாடல், சமரசத்துக்கு வருதல், கருத்து ஒற்றுமையை அடைதல் ஆகியவற்றின் மூலம் அமைதியை நிலைநாட்டப் பாடுபடுவதாக மக்களுக்கு அளித்த ஆணையின் பிரகாரமே தாம் நடப்பதாகவும் ஜனாதிபதி சந்திப்பின்போது தெரிவித்தார்.

தமிழ் மக்களின் இறைமையை நிலைநாட்டுதல், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுதல், உரிமைகளை மதித்து வழங்குதல் போன்றவை பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அவசியம் என்று விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் வாசஸ்தலமான ''சுசாரித்த'' வில் நேற்று மாலை இந்த மரியாதையின் நிமித்தமான சந்திப்பு இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தூதுக்குழுவில் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திலிப் யோகி என்றழைக்கப்படும் யோகரத்தினம், திரு. கருணாமூர்த்தி, திரு பஞ்சாட்சரம்லோறன்ஸ், திருமதி பாலசிங்கம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இதற்கிடையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஐவர் குழுவும், அரசாங்க மூத்த அதிகாரிகளைக் கொண்ட எழுவர் குழுவும் பூர்வாங்கமாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தைக்கான வழிமுறைகளை வகுத்துக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப ஒரு நல்ல காரியம் செய்யப்போகினம் எண்டு சொல்லுங்கோ ...... காலை வெட்ட நினைக்காமல் சப்பாத்தை வெட்ட நினைக்கினம் அது தான் ......!

## துப்பாக்கிச் சூடும் ஷெல் தாக்குதலும்

பச்சிலைப்பள்ளி, மே 5

நேற்று முன்தினம் (புதன் கிழமை) இத்தாவில் அரசர் கேணிப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் தாக்குதலும் இடம்பெற்றது.

நேற்று நிலைமை வழமைக்கு திரும்பியபோதிலும் பதற்றம் தணியவில்லை, [ஒ-117]

## அரசஅதிபரின் பூதவுடலுக்கு அமைச்சர் விஜே அஞ்சலி

காலஞ்சென்ற யாழ் அரசாங்க அதிபர் பஞ்சலிங்கத்தின் பூதவுடலுக்கு பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகளுக்கான அமைச்சர் திரு. யு.பி. விஜேகோன் நேற்று அஞ்சலிசெலுத்தினார்.

இலங்கை அரசாங்கத்தின் விசேட பிரதிநிதியாக வந்த திரு. விஜேகோன், ஸ்ரீ லங்கா விமானப்படை ஹெலிக்கொப்டர் மூலம் கொக்குவில் பகுதியில் வந்திறங்கினார். பின்னர் அங்குள்ள அமைதிப்படை முகாம் ஒன்றிலிருந்து அமைதிப்படையினரின் பாதுகாப்புடன் ஆனைக்கோட்டையில் உள்ள அரச அதிபரின் இல்லத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

திரு. பஞ்சலிங்கத்தின்மூத்த புதல்வி நேற்று அமெரிக்காவிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார்.

அரசாங்க அதிபரின் இறுதிச் சமயக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளைசனிக்கிழமை காலை 8 மணிக்கும், ஈமக்கிரியைகள் காலை 10 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திலும் நடைபெற உள்ளன. [ஒ-9]

## கன்னாதிட்டி மக்கள் வங்கியில் மீளக் குடியமர்தல் நிவாரணம்

### முன்னர் பெறாதவர்களுக்கு மட்டும்

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் மீளக்குடியமர்தலுக்கான ரூபா ஆயிரம் வழங்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாக உள்ளன.

பெப்ரவரி மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளிலும் மார்ச் 4ஆம் திகதியும் மீளக்குடியமர்தல் நிவாரணத்தைப் பெறத் தவறியவர்களுக்கே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப் படவுள்ளன.

இந்தக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 10ஆம்திகதி புதன் கிழமை வழங்கப்படஉள்ளன,

பிரஸ்தாப தினத்தில் வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை மேற்கு, சங்கானைதெற்கு, சுழிபுரம் கிழக்கு, தொல்புரம், சங்கானை மேற்கு, சங்கானை கிழக்கு, அராலி தெற்கு மேற்கு, அராலி மேற்கு, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை தெற்கு, சங்கரத்தை, சுழிபுரம் மேற்கு ஆகியபகுதிகளைச் சேர்ந்த177 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ-9)

## சர்வதேசத் தமிழர் மாநாட்டில் பிரபாகரனின் செய்தி

லண்டன், மே 5

உலகத் தமிழர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் லண்டனில் நடந்த இரண்டு நாள் சர்வதேசத் தமிழர் மாநாட்டுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

இந்த மாநாடு ஏப்ரல் 29, 30 ஆம் திகதிகளில் லண்டனில் நடைபெற்றது. இந்தியா உட்பட பல வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டு உரையாற்றினர்,

''தமிழீழம், இந்தியா, சிறிலங்கா: தமிழ் தேசியத்தின் எதிர்காலம்'' என்பதே இந்த மாநாட்டின் பிரதான தொனிப் பொருளாக இருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அனுப்பிய செய்தி மாநாட்டில் வாசிக்கப்பட்டது.

''தமிழீழம் அமைக்கும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் உதவ வேண்டும்.

தமிழீழம் என்ற இலட்சியத்தை நோக்கிச் செல்லும் எமது பாதையில் முட்டுக்கட்டை போட எந்தச் சக்திக்கும் தமிழ் மக்கள் இடமளிக்க மாட்டார்கள்''- இப்படித் திரு. பிரபாகரன் தமது செய்தியில் கூறியிருந்தார்.

### தீர்மானங்கள்

★ வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட வேண்டும். 1987 செப்டம்பரில் முன்வைக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

05—05—1989
சித்திரை — 22
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
05.56 முதல் 07.26 வரை
ராகுகாலம்:
10.26 முதல் 11.56 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
அமாவாசை விரதம்

## யாழ். மாவட்ட மாணவருக்கு மதிய உணவு அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், மே 5

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் அடுத்த வாரமளவில் ஆரம்பமாகும் என அறியவருகிறது.

இதற்கான விவரங்களை அறிவிக்கும் கூட்டம் ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில் கொத்தணி அதிபர்சள், கோட்டக்கல்வி அதிகாரிகள் வட்டாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-9)

## எவரெஸ்ட் ஏறும் இலங்கைச் சாரணர்!

கொழும்பு, மே 5

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்காக இலங்கைச் சாரணர் குழு ஒன்று வருகிற பத்தாம் திகதி இந்தியா செல்கிறது.

கண்டி தர்மராஜா கல்லூரியைச் சேர்ந்த சாரணர் குழுவே புதுடில்லி செல்லவுள்ளது.

இக்குழு நேற்று ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து தனது திட்டத்தைத் தெரிவித்தது.

முயற்சி வெற்றி பெற ஜனாதிபதி வாழ்த்தினார். [ஒ-எ]

## புலோப்பளை பகுதியில் நேற்று நிலவிய பதற்றம்

பச்சிலைப்பள்ளி, மே 5

நேற்றுக்காலை புலோப்பளை பகுதியில் துப்பாக்கிப் பிரயோகமும் குண்டுவெடிப்பு சத்தமும் கேட்டவண்ணம் இருந்தன.

இதனால் இப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இப்பகுதியில் நடந்த சம்பவத்தில் மூன்று படையினர் காயமடைந்ததாக தெரிவிக்கப் பட்ட போதிலும் அதனை ஊர்ஜிதம்செய்யமுடியவில்லை.

இதனையடுத்து புலோப்பளையைச் சுற்றியுள்ள பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடைபெறுவதாக அறிய வந்தது. [ஒ-117]

## நேற்றைய வேட்டுக்கள்

வல்வெட்டித்துறை, மே5

வடமராட்சிப் பகுதிகளில் நேற்று திடீர் திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப் பட்டன.

புலோலி, நெல்லியடி .வியாபாரிமூலை நவிண்டில், பொலிகண்டி பகுதிகளிலேயே வேட்டுச் சத்தங்கள் கேட்டன. [ஒ-160]

### நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட

## இந்தியப் பட்டதாரிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்

தாளையடி, மே 5

பட்டதாரிகளின் ஆசிரிய நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கு அனுராதபுரம் சென்ற இந்தியப் பட்டதாரி ஆசிரியர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து இந்தியாவில் பட்டம் பெற்ற பட்டதாரிகளும் கடந்தவாரம் ஆசிரிய நியமனத்திற்கானநேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டிருந்தார்கள்.

நேர்முகப்பரீட்சைக்குழுவில் இருந்தவர்கள் இந்தியப்பட்டதாரிகள் விடயத்தில் கல்விச் சேவை ஆணைக்குழு ஆணையாளருடன் கலந்தாலோசித்தே அவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் விடயத்தில் முடிவு எடுக்கவேண்டுமெனக்கூறி பரீட்சார்த்திகளுக்கு எதுவித முடிவையும் கூறாமல் திருப்பி அனுப்பிவிட்டார்களாம்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டதாரிகள் ஆவர். [ஒ-144]

# திருமலை பிரட்ரிக் கோட்டையிலுள்ள சிங்கள அகதிமுகாம் உடன் மூடப்படும்

## அங்கிருந்த அனைவரும் சீனக்குடாவுக்கு மாற்றம்

கொழும்பு, மே 5

திருகோணமலை பிரட்ரிக் கோட்டைக்குள் உள்ள சிங்கள அகதி முகாம் உடனடியாக மூடப்படும்.

இங்குள்ள ஆயிரத்துக்கும் அதிகமான சிங்கள அகதிகள் திருகோணமலை நகரில் இருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள சீனக்குடா கிளப்பன் பேர்க் அகதி முகாமுக்கு மாற்றப்படுவர்.

வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தின பாதுகாப்புப் படையினருக்கு இதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறார்.

அமைச்சர் திரு. விஜேரத்தின கடந்த 30 ஆம் திகதி திருகோணமலைக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரிற் கேட்டறிந்தார்.

பின்னர் அவர் அப்பகுதி நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் கொண்ட மாநாடு ஒன்றை நடத்தினார்.

திருமலைக்கச்சேரி பிரட்ரிக் கோட்டைக்குள் இருக்கிறது.

### ஆயிரம் சிங்கள அகதிகள்

1987 செப்டம்பர் முதல் திருகோணமலை பிரட்ரிக் கோட்டையில் சுமார் ஆயிரம் சிங்கள அகதிகள் தங்கியிருக்கிறார்கள்.

நகரில் ஏதும் வன்செயல்கள் இடம்பெற்றால் கச்சேரிக்குக் கடமைக்குச் செல்லும் தமிழ் ஊழியர்கள் சிங்கள அகதிகளினால் துன்புறுத்தப்படுகின்றனர். தமிழ் ஊழியருக்கு போதிய பாதுகாப்பு இல்லை.

### தமிழ் ஊழியர் பாதிப்பு

கடந்த மாதம் 13 ஆம் திகதி திருமலை நகரில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கச்சேரியில் சடமைக்குச் சென்றிருந்த தமிழ் ஊழியர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்

கொழும்பு, மே 5

ஹொரணை பொலிஸ் நிலையம் மீது இனந்தெரியாத கோஷ்டி நேற்றுக் காலை தாக்குதல் நடத்தியது.

ஆறுபேர் கொண்ட இக் கோஷ்டி மீது பொலிஸார் எதிர்த் தாக்குதல் நடத்தினர். அதைத் தொடர்ந்து அக் கோஷ்டி பின்வாங்கியது.

இம்மோதலின்போது பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் காயமடைந்தார். [ஒ-எ]

## கொழும்பு விடுதிகளில் சோதனை; தமிழ் இளைஞர்கள் பலர் கைது

கொழும்பு, மே, 5

வார இறுதியில் கொழும்பு நகரில் உள்ள பல விடுதிகளைச் சோதனையிட்ட பொலிஸார், நூற்றுக்கும் அதிகமான வடபகுதி இளைஞர்களைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 5 லட்சம் ரூபாவுக்கு அதிகம் பெறுமதியுள்ள நகைகள், ரொக்கப்பணம் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

முகத்துவாரம், கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் இவை என்று சந்தேக நபர்கள் ஒப்புக் கொண்டனர் என்று கூறப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தேடுதல்

வட்டக்கச்சி, மே 5

கிளிநொச்சி, 154 ஆம் கட்டை செல்வபுரம் பகுதியில் கடந்த புதன் கிழமை இரவு ஆரம்பமான தேடுதல் நேற்றுப் பகல் நீடித்தது.

கடந்த வாரத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தை அடுத்தே இப்பகுதியில் தேடுதல் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-163]

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Honda Reconditional புதிய, பழைய Model C 90, C 70, C 50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. 390, மெயின் வீதி, சுண்டுக்குளி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம். [10826]

### FOR ALE

Pyramid, V. G. P. Thomsun, Esquir, Original Video கசட்டுக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விலியா வீடியோ கிளப், நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி. [363]

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

[DEKALB பிறவுண் சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3-50 சிறு அட்வான்ஸ் கட்டி பதிவு செய்யலாம். இல.9, கந்தையா லேன் சுன்னாகம், (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (10820]

### கோழிக்குஞ்சு விநியோகம்

புரொயிலர் குஞ்சுகள் (Broiler Chicks) கறுப்பு சேவற்குஞ்சுகள் பிறவுண் சேவற்குஞ்சுகள். 4/5/89 வியாழக்கிழமை. விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (351)

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு வரிச் சேவல் குஞ்சுகள் (Cobb) புரொயிலர்க் குஞ்சுகள் [9-5-89] செவ்வாய்க்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியேபதிவுசெய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [10775]

### தேவை

எமது ஸ்தாபனத்திற்கு Electronic [இலத்திரனியலில்] வேலையில் அனுபவம் உள்ளவர்கள், வேலை பழகுபவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். S. V. N. Electronic, [Work Shop],116, P. W. D. Road. Mullaitivu. [356]

வீடியோ கிளப்பிற்கு பெண் முகாமையாளர் தேவை. 1 மைல் சுற்றுடலுக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். S. T. L விடியோ கிளப், No. 33 நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி சந்தி. [357]

### மணமகன் தேவை

யாழ். இந்து வேளாள 31 வயது G. C. E படித்த சைவ போசனமுடைய மணமகளுக்கு அதே குலத்தைச் சேர்ந்த நற்குணமுள்ள நிரந்தர உத்தியோகமுள்ள 40 வயதுக்கு உட்பட்ட மணமகன் தேவை. சீதனம் யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில் வீடு உட்படக் கொடுக்கப்படும். இல. 55, C/o உதயன், யாழ்ப்பாணம். ]10811]

பட்டதாரி வயது(44)யாழ்ப்பாணத்தில் அரசாங்க சேவை எழுது வினைஞரான இந்து வேளாள குல மணமகளுக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்க: 506, C/o Uthayan, Jaffna. [359]

### மணமகள் தேவை

அரசாங்க உத்தியோகம் பார்க்கும் வேளாள குலத்தைச் சேர்ந்த இந்துமத லக்கினத்தில் செவ்வாய் குற்றமுள்ள நடுத்தர வயதுள்ளவருக்கு 35 வயதுக்கு குறைந்த படித்த மணமகள் தேவை. குடும்ப விபரங்களுடன் சாதகக் குறிப்பிடனும் விண்ணப்பிக்கவும். 501, C/o, உதயன் யாழ்ப்பாணம். 312)

### தவறிவிட்டது

ஜயனி - யோகநாதன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு என்ற அடையாள அட்டை திருநெல்வேலிக்கும் கிரிமலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (10828)

எனது அடையாள அட்டை இலக்கம் 468532026 X அச்சுவேலியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (360)

### கிறிஸ்தவ சைவசமய திருமண சேவை

எம்மிடம் இரு மதத்தையும் சேர்ந்த ஆண்களும், பெண்களும் உண்டு. தங்கள் அன்புப் பிள்ளைகளின் வாழ்வில் அக்கறை கொண்டவர்கள் அவர்களின் எதிர்காலத்தை சீரும் சிறப்புடனும் அமைக்க எம்மை நாடுங்கள். அமைப்பாளர்: திரு. வின்ரோ மகேந்திரா, தொடர்பு; No. 6, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம், (மக்கள் வங்கிக்கருகாமை)No. 17,கோவில் வீதி, யாழ்ப்பாணம். (352)

---

## யாழ். பல்கலைக்கழகம், விஞ்ஞானபீட பரீட்சைகள் 1988

மே மாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பரீட்சைகள் மே மாதம் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் முன்னர் அறிவித்த ஒழுங்கின்படி நடைபெறும்.

பதில் பதிவாளர்.
3 5-1939

(சி/2446)

---

## யாழ் பல்கலைக்கழகம் கலைப்பீட பரீட்சைகள்-1988.

1. மேமாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த இரண்டாம்வருட பரீட்சைகள் முன்னர் அறிவித்த அதே ஒழுங்கின்படி மேமாதம் 10 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதிவரை நடைபெறும்.

2. மே மாதம் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இரண்டாம் வருட பரீட்சைகள் முன்னர் அறிவிக்கப்பட்டபடி நடைபெறும்.

3. மே மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த இறுதியாண்டு பகுதி 111 பரீட்சைகள் முன்னர் அறிவிக்கப்பட்ட ஒழுங்கின்படி மேமாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகி 20 ஆம் திகதி முடிவடையும்.

பதில் பதிவாளர்,
3- 5- 89

(C/2445)

---

## VACANCY

### Hospital Supervisor

Wanted for immediate engagement a Supervisor in the Unified Medical Service of the Diocese of the Church of South India.

Age: Between 30 — 45 years.

Experience: Labour Management and in Electricity and Work shop.

Salary: Negotiable.

Please apply before 15th May 1989.

To:
THE ACTING MEDICAL SUPERINTENDENT,
GREEN MEMORIAL HOSPITAL,
MANIPAY.

[C/ 2432]

---

### அச்சக உரிமையாளர்களுக்கு

## ஓர் நற்செய்தி

கடந்த 25 வருட காலமாக தரணியிலே தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுவிட்ட பிறிசம் (Prism) தயாரிப்புக்களான News, Letter Press, Offset Gloss, ரோணியோமைவகைகள் என்பன வெளிநாட்டு மைவகைகளின் தரத்திற்கேற்ப பயிற்றப்பட்ட தொழில் நுட்பவியலாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டு பின்வரும் விற்பனை நிலயங்களில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

(1) தயா அச்சகம் இல: 138 நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(2) அம்பலவாணர்அன்சன்ஸ்,196 கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

கூடுதலான மை கொள்வனவு செய்வோருக்கு விஷேட கழிவும், விரும்பிய வர்ணங்கள் குறித்த தவணையிலும் செய்து தரப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

(1) 27, Industrial Estate, Atchuvely.
(2) 71, Messengar Street, Colombo— 12.

(10822)

---

## தேவை

### ஆபிஸ் பையன்

18 - 25 வயதிற்குட்பட்ட பையன் office வேலைக்கு தேவை. இரண்டு நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும். யாழ் நகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

**சிக்மா பம்ப்ஸ்,**
**274/1 ஆஸ்பத்திரி விதி,**
**யாழ்ப்பாணம்.** (C/2441)

---

வட்டுக்கோட்டை
யாழ்ப்பாணம் கல்லூரி தொழில் நுட்ப நிறுவன

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

மேற்படி நிறுவன பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் 07 - 05 - 89 ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணியளவில் நிறுவன ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமாறு வேண்டுகிறேன். மேலும் உறுப்பினர்களாக சேர விரும்பும் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தந்து அங்கத்துவத்தை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

T. கொண்டையா
செயலாளர்.

(421)

---

# DIPLOMA IN HOME ECONOMICS

- Cake Icing
- Needle Work
- Cookery
- Hair - Styling
- Flower Making
- Glass & Fabric painting
- Handi -Craft
- கோலங்கள் போடுதல்

## பயிற்சிக் காலம்: 6 மாதங்கள்

★ பயிற்சியின் முடிவில் "Diploma in Home-Economics" தகைமைச் சான்றிதழ் ஒவ்வொரு பாடங்களின் திறமைகளுக்கேற்ப பிரத்தியேக திறமைச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ பயிற்சிகள் திங்கள், புதன், வியாழன் ஆகிய தினங்களில் காலை 9. 00 மணிக்கு ஆரம்பமாகும்.

## பயிற்சிகள் ஆரம்பம்: 10-5-1989 (புதன்)

★ தொழில்புரியும் பெண்களின் வசதி கருதி ஞாயிற்றுக்கிழமை வகுப்புக்களும் 14-05-89 அன்று ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு:

**KALALAYAAH**
(Regd.)
(Academy of Culinary & Fine Arts)
Victoria Road,
Jaffna. (C/ 2447)

---

## JOLLY STAR SPORTS CLUB, JAFFNA

## Limited Overs Cricket Tournament 1989.

### Sponsored by SHABRA UNICO Finance Ltd.

FOR THE

## SHABRA TROPHY

### FIXTURE

| A Group | B Group |
|---|---|
| 1 Kokuvil Central Community Centre S. C. | 1. Five Stars S. C. |
| 2. University S. C. | 2. Northern S. C. |
| 3. Jolly Stars S. C. | 3. Gold Stars S. C. |
| 4. Grasshoppers S C. | 4. Shabra S. C. |
| 5 Stanley S. C. | 5. Centralites S C |
| 6. Green & Gold S. C. | 6 Moothavinayagar S. C. |
| 7. Centralites S. C. (Chocs) | 7 Johnians S. C. |

| Date | | | | Time |
|---|---|---|---|---|
| 12-05-89 — | University | VS. | Jolly Stars | — 1-00 p m. |
| 13 05-89— | Grasshoppers | VS. | Stanley | — 8-30 a.m. |
| | Five Stars | VS. | Northern | — 1-00 p.m. |
| 14-05 89— | Gold Stars | VS. | Shabra | — 8-30 a m. |
| | Green & Gold | VS. | Centralites (Chocs) | — 1-00 p.m. |

All matches will be played at the St. Patrick's College grounds

C K. Visakaratnam
Chairman
Tournament Committee.

Shan. Johnson
Secretary.

---

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு:
21 - 10 - 1961

உதிர்வு:
14 - 04 - 1989

### சச்சிதானந்தம் தயாபரன் [தயா]

14 - 04 - 89 அன்று ஆலடிச் சந்தியில் அகால மரணமடைந்த திரு. சச்சிதானந்தம் தயாபரன் [தயா] அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!


அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் நொர்தேண் பாமஸியினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நண்பர்கள்.

(10825

---

## கண்ணீர் அஞ்சலி



### S. சுரேஸ்குமார் (வரதப்பா)

தாயின் மடியில்: 27- 10- 1964

ஈழ மண்ணில்: 30- 04- 1989

தாய் நாட்டை மீட்டிட
தன்னுயிரை இளவயதினில் ஈந்திட்ட
வீரவேங்கை வரதப்பாவிற்கு
எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

நீங்கள் எம்மைவிட்டுச் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சை விட்டகலா!

உங்கள் பிரிவால் துயருறும்;
பெற்றோர், நண்பர்கள்.

மயிலிட்டி. (420)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது

## பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் பிரதிபன் சுரேஸ்குமார்

**05 - 05 - 1989 (லண்டன்)**

சூராவத்தை சுன்னாகத்தைச் சேர்ந்த சுரேஸ்குமார் மாலதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரதீபன் இன்று [05 - 05 - 1989] முதலாவது பிறந்த நாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை லண்டனில் உள்ள அம்மா, அப்பா, சூராவத்தை தாத்தா, அம்மம்மா, நந்தினி அன்ரா (இந்தியா). மோகன் அங்கிள் (ஜேர்மனி), கிரி அன்ரா, சித்தி அன்ரா, லண்டன் அப்பம்மா, நாவலர் றோட் - ஜெயக்குமார் பெரியப்பா குடும்பத்தினர், இந்தியா கலா அன்ரா குடும்பத்தினர், லண்டன் ஞானேந்திரன் பெரியப்பா குடும்பத்தினர், லண்டன் தஞ்சி அன்ரா குடும்பத்தினர், லண்டன் சுதன் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலமாக வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

சூராவத்தை,
சுன்னாகம் [சி-2427]

## பிரதேச கல்வித் திணைக்களம்

### முல்லைத்தீவு

**ஆசிய அபிவிருத்தி வங்கி- கல்விப் புனருத்தாபன திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு பாடசாலைகளுக்குத் தேவையான உருக்கு, தளபாடங்கள் கொள்வனவு செய்தல்**

1. கீழ்க்காணப்படும் உருக்குத் தளபாடங்களும், மரத்தளபாடங்களும் முல்லைத்தீவு கல்வித்திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கு தேவைப்படுகின்றன. இவை விநியோகிக்கக்கூடிய பாடசாலைகளின் பெயர்கள் மேற்படி திணைக்களப் பொறியியலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலைகளுக்குத் தளபாடம் வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான முத்திரையிடப்பட்ட கேள்விகளை உருக்கிலான/மரத்திலான பாடசாலைத்தளபாடத்தை வழங்குபவரிடமிருந்து/ உற்பத்தி செய்யப்பட்டவரிடமிருந்து முல்லைத்தீவுப் பிரதேச பிரதிக் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவர் 1989 மே மாதம் 24-ஆம் திகதி காலை 10. 00 மணி வரை ஏற்றுக் கொள்வார்.

2.
1. மாணவர் உருக்கு மேசைகள்
2. மாணவர் உருக்கு கதிரைகள்
3. பாலர் உருக்கு மேசைகள்
4, பாலர் உருக்குக் கதிரைகள்
5. தாங்கிகளுடன் கூடிய கரும்பலகை
6. 2 லாச்சிகளுடன் கூடிய அதிபர் மேசைகள்
7. ஒரு லாச்சி ஆசிரியர் மேசைகள்
8. ஆசிரியர் கைப்பிடிக் கதிரைகள்

3. விதந்துரைக்கப் பெற்ற படிவங்களில் இணைப் பிரதிகளிற் கேள்விப்பத்திரங்களைத் தயாரித்து கேள்விப் பத்திரங்களை இட்டனுப்பும் கடித உறையின் இடதுபுற மேல்மூலையில் ''பாடசாலைத் தளபாடத்திற்கான கேள்விப்பத்திரம்'' என எழுதப் பெற்று இவ்வலுவலகத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் இடப்படுதல வேண்டும். அல்லது முடிவு நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவு அஞ்சலில் அனுப்புதல்வேண்டும். முடிவு நேரம் முடிந்ததும் கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமாயிருக்கலாம்.

4. கேள்விப் படிவங்கள், கேள்வி நிபந்தனைகள், மாதிரிப்படங்கள், விபரக் கூற்றுக்கள் என்பவற்றை மீளளிக்கப் பெருத கட்டணமாகிய 100/- ரூபாவையும் மீளளிக்கத்தகு கட்டணமாகிய 500/- ரூபாவையும் செலுத்துவதன் பேரில் 19. 05. 1989 திகதியன்று, பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**எஸ். எஸ். மனோகரன்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**முல்லைத்தீவு.**

(C/2413)

## புலோலி மேற்கைச் சேர்ந்த
# 167விவசாயக் குடும்பங்களுக்கு நிவாரணம்

பருத்தித்துறை, மே.5

கடந்த காலங்களில் ஸ்ரீ லங்கா இராணுவமுகாம் விஸ்தரிப்பினால் பாதிக்கப்பட்ட புலோலி மேற்கைச் சேர்ந்த 167 விவசாயக் குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப் பட்டுள்ளன.

இவ் உதவிகளை வழங்கிய அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துக்கும் இவ் உதவிகளைப் பெற்றுத்தந்த பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலுக்கும் புலோலி கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலையம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையப்பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றுகையில் திரு. சு. தங்கராசா மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது ''புலோலி மேற்கு பகுதி விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்ப்பாண அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் 4 லட்சத்து 17 ஆயிரத்து 500 ரூபாவை நஷ்ட ஈடாக வழங்கி உள்ளது.

இதில் பொருள் உதவியாக 2லட்சத்து 29 ஆயிரத்து 500 ரூபாவும் இரசாயன உதவியாக 1 லட்சத்து 88 ஆயிரமும் வழங்கப்பட்டன.

1984 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதிய கட்டடத்துக்கான கட்டட வேலைகள் நாட்டில் தொடர்ந்தும் ஏற்பட்டுள்ள நிலைமைகள் காரணமாகப் பூர்த்தியாக்க முடியாத நிலையில் உள்ளன.

இந்து கலாச்சார அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதி உதவி இதுவரை கிடைக்கவில்லை.

இப்படி அவர் கூறினார். (ச- 118)

## பாணும் பணிஸூம் மதிய உணவு

தாளையடி, மே 5

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு மதிய உணவாக பசுப்பால், பணிஸ் அல்லது வடை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த மதிய உணவுவை கிளிநொச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர் விற்பனையாளர் சங்கம் பாடசாலைகளுக்கு வழங்கி வருகின்றது. (ஒ-144)

## சிங்கப்பூரில் விவேகானந்தர் ஜயந்தி இல. பிரதிநிதிகளும் சென்றுள்ளனர்

யாழ்ப்பாணம், மே 5

சிங்கப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், சுவாமி விவேகானந்தரின் 125 ஆவது ஜயந்தி விழாவை நடத்த ஒழுங்கு செய்துள்ளது.

இவ் விழாவின் போது சுவாமி விவேகானந்தர் படைப்புகளின் 8 தொகுதிகள் கொண்ட ஆங்கில நூல் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன் சிங்கப்பூரில் சர்வமத மாநாடு ஒன்றும் நடைபெற உள்ளது.

இம் மாநாட்டில் உலகின் பல பாகங்களிலும் உள்ள ராமகிருஷ்ண மிஷன்களின் பிரதிநிதிகள் சலந்து கொள்கிறார்கள்.

இலங்கையில் இருந்து கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சம்பிரக்ஞானந்தரும், பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமப் பொறுப்பாளர் சுவாமி சித்ரூபானந்தாவும் இந் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள சிங்கப்பூர் சென்றுள்ளனர்.

சிங்கப்பூரில் வைபவங்கள் முடிவுற்றதும் சுவாமி சித்ரூபானந்தா மலேசியாவில்உள்ள அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மலேசியா செல்வார் எனவும் அறிய வருகின்றது. (ச)

## வங்கி ஊழியர் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 5

வங்கி ஊழியர்களுக்கான பதவியுயர்வுப் பரீட்சைகள் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

பரீட்சைகள் எதிர்வரும் 6 ஆம் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் நடைபெறும்.

பரீட்சைகளுக்கான ஏற்பாடுகளை யாழ்கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது [ஓ-9]

## கோரிக்கை

சங்கானை ப. நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உப-மண்ணெண்ணெய் நிரப்பும் நிலையம் ஒன்றை அராலியில் அமைக்க வேண்டும் என உள்ளூர் மக்கள் கோரிக்கை விடுதது வருகின்றனர். [க-112

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் சித்திரை மாதம் 24 ஆம் திகதி (7 - 5 - 89) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை அமைந்த சுபவேளையில்;

| எமது புத்திரன் | | எமது புத்திரி |
|---|---|---|
| திருவளர் செல்வன் | | திருநிறைச் செல்வி |
| **சேகர்** | | **சண்முகப்பிரியா** |
| அவர்களுக்கும் | | அவர்களுக்கும் |

பாரிஸ் [Paris] 32 றூ பபேக் டு கோயில் மண்டபத்தில் திருமணம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்துள்ளார்கள், என்பதை அறியத்தருகிறோம்.

வாழ்க மணமக்கள்!!

**திரு. சாமித்தம்பி,**
(பென்சனர்)
**திருமதி சாமித்தம்பி.**
(இளைப்பாறிய ஆசிரியை)
**''பொன் இல்லம்''.**
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.

**திரு. சி. குமாரசாமி,**
(இளைப்பாறிய ஆசிரியர்)
**ஸ்ரீமதி குமாரசாமி.**
(அதிபர், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்)
**''கல்யாணி''**
லோட்டன் வீதி,
மானிப்பாய்.

(410)

**உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை பெறுவதற்கான**

**கம்பியூட்டர் கல்வி**

**Diploma in Data Processing and Computer Programming in Basic Language**

**ஆரம்பம்: 15 - 05 - 1989 (திங்கள், புதன், வெள்ளி)**

**சேரும்போது செலுத்தவேண்டியது ரூபா 500/-**

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I.B.M. (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்யவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 14 - 05 - 1989**




UNIKCO COMPUTER CENTRE

**No. 5, Power House Road, 2nd Lane, Jaffna.**

(Near Sub - Post Office)

(சி/2434)

**K. K. ELECTRONICS**

- வீடியோ படப்பிடிப்புகள்
- வெளிப்புற கலர்ப் படப்பிடிப்புகள்
- புதிய பழைய தமிழ், ஆங்கிலம், ஹிந்தி திரைப்படங்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும்.
- புதிய பழைய திரைப் படப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்.

**கே. கே. எலக்ரோனிக்ஸ்,**
**இல. 27, மின்சார நிலைய வீதி,**
**3 வது ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

பழையகண்டி,
காரைநகர்.

(2443)

## வேலை வாய்ப்பு லிபியா

1. தச்சுவேலை தெரிந்தவர்கள் L. D. 85
2. மேசன் ,,
3. வெல்டிங் வேலை ,,
4. பார்பென்டேர்ஸ் ,,

ஒரு L.D. யின் பெறுமதி ரூபா 112.00

வயது 25 — 45. 2 வருட ஒப்பந்தம், லீவு, இன்சூரன்ஸ் லிபியாவின் சட்டங்களுக்கு அமைய இருப்பிடம், மெடிக்கல், உணவு வசதி (Mess Facility) இனம்.

தயவு செய்து பாஸ்போட், பாஸ்போட் படம் 4, சான்றிதழ்களு ன் உடனடியாக ஒரு கிழமைக்குள் வரவும்.

**இந்திராணி ஏஜென்ஸி,**
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

Licence No. 616

[413]

## FORTUNA ENTERPRISES

### பிரயாண ஒழுங்குகள்

**குவைத்:**

1. ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் (CLEANERS)
2. FITTERS
3. ELECTRICIANS
4. FIRE FIGHTERS.

தொடர்பு கொள்ளவும்:

**இ. விஸ்வேஸ்வராயன்,**
3 ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(சி/2246)

**பிரெஞ்சு மொழி வகுப்புகள்**
**LEARNING FRENCH**

**Join the Alliance Francaise de Jaffna**

For Beginners and Others
New Term Commences on 05-05-89

**Information and Registration:**

**யாழ் பிரெஞ்சு நட்புறவுச் சங்கம்**
Alliance Francaise De Jaffna
130, 1st. Cross Street,
JAFFNA.

[C/2349]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



மலர்வு:
1969- 03- 08

உதிர்வு:
1989- 04- 11

### செல்வன் ஜெயநாதன் சிவசாமி
(ஜெயம்)


அக்காள் சென்று ஓராண்டு - அவளிடத்து
நீ சென்று ஓர் திங்கள்
அடி மேல் அடி ஐயோ!
இடி மேல் இடி ஐயோ!!
ஏது செய்வோம் எம் விழியே - எம் ஜெயமே!
இதுவெல்லாம் விதிதானே?

உங்கள் பிரிவினால் வருந்தி நிற்கும்:
தாய், தந்தை, சகோதரர்கள்

கிராஞ்சி,
பூநகரி.
(10807)

[உடன் அறியத்தரமுடியாமைக்கு வருந்துகிறோம்]

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



### தவமணிநாயகம் முரளிகிருஷ்ணு
[சிறைவாசன்]

| அன்னை மடியில்: | மண்ணின் மடியில்: |
|---|---|
| 24 - 11 - 1967 | 21 - 03 - 1989 |

21-03 1989இல் உயிர் நீத்த எமது அன்புச்செல்வம் முரளிகிருஷ்ணுவுக்கு நாம் கூறும் அஞ்சலி!

அன்பு மகன் நீ எனக்கு இனிய அன்னை நானுனக்கு
ஆசை மகன் நீ எனக்கு நேசபிதா நானுனக்கு
பாசமுள்ள இளைய மைந்தன்
என்றுன்னைப் பேணி வந்தோம்
முரளி கிருஷ்ணு - வென்ற
முகுந்த நாமம் சூட்டி நின்றோம்
சின்னஞ் சிறுவயதில் தீரமுள்ள பாலகனாய்
அன்னையின் பாசமுள்ள அரவணைப்பில் வளர்ந்தவனே
பள்ளிப்படிப்பதனை பாங்காக முடித்துவிட்டு
மண்காக்கும் பாதையிலே நடை பயின்று சென்றவனே!
வெலிக்கடை சிறையினிலே
அடைபட்டுக்கிடந்த உன்றன்
உள்ளத்தினில் உறைந்திட்ட சுதந்திர தாகமதை
அடிபட்டும் உதைபட்டும் அஞ்சாது காத்தவனே!
வீறுநடை போட்டு நின்ற வீரமகன் நீயன்றோ!
நாள் எண்ணி மாதமெண்ணி
வருடங்கள் தானுமெண்ணி
நாம் பெற்ற செல்வத்தை காண்பதற்கு
காத்து நின்றோம்!
கல்லுவைத்த கோயிலெல்லாம்
கை எடுத்துக்கும்பிட்டோம்
நேராத நேர்த்தியெல்லாம் நினைத்துனக்குச் செய்து
என்ன செய்வோம் தலைவிதியை
எம்மைவிட்டுப்போய் விட்டாய்!
மண்காத்த பரம்பரையில் வளமாக இடம் பெற்றாய்!
தவமணியின் புதல்வன் இவன்
ஈழத் தமிழ் தனயன் என்று
சாற்றுகின்றார் எல்லோரும்
செவி குளிரக் கேட்கின்றோம்!
புகழுடைய நாமமடா நாம் பெற்ற புண்ணியமே!
பொன்றுக குன்றுக மகிமையுடன் மறைந்தனையோ
மார்பிலே வடுவேந்தி மறக்குலத்தைக் காத்தவனே!
மாண்புள்ள உன் ஆத்மா சாந்தியுற வணங்கிடுவோம்!

- அன்புப் பெற்றோர்.

[406]

## அறிவொளி

அறிவொளி கல்வி வெளியீட்டுக்கு உயர்தர கலை, வர்த்தக துறை மாணவர்களுக்கு ஏற்ற கட்டுரைகள் விரிவுரையாளரிடமும் பட்டதாரி ஆசிரியர்களிடமும் இருந்து எதிர்பார்க்கின்றோம். பிரசுரத்திற்கு ஏற்கப் படும் கட்டுரைகளுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்
அறிவொளி
த. பெ. இல. 162,
கொழும்பு.

[309]

## வேலை வாய்ப்பு

### ★ லிபியா ★

| | சம்பளம் |
|---|---|
| 1. Electric Engineer | L. D. 170 – 180 |
| 2. ஏயர் கொண்டிஷன் திருத்துபவர்கள் | 85 – 95 |
| 3. மோட்டார் வைண்டர்ஸ் | 85 – 95 |
| 4. ஓவர்செட் லைன்ஸ்மன் | 85 – 95 |
| 5. எலெக்றிகல் - யந்திர இணைப்புகள் | 85 – 95 |
| 6. மெக்கானிக்ஸ் - டீசல் லொறி | 85 – 95 |
| 7. மெக்கானிக்ஸ் - புல்டோசர் கிறேன் போன்ற வாகனங்கள் | 85 – 95 |

ஒரு L. Dயின் பெறுமதி ரூ. 112. 00

வயது 25- 45. 2 வருட ஒப்பந்தம், லீவு, இன்சூரன்ஸ், லிபியாவின் சட்டங்களுக்கு அமைய இருப்பிடம். மெடிக்கல் இனம். 3 மாத புறபேஷன் (Probation)

தயவுசெய்து பாஸ்போட், பாஸ்போட் படம் 4, சான்றிதழ்களுடன் ஒரு கிழமைக்குள் நேரில் வரவும்:

### இந்திராணி ஏஜென்ஸி
18 1/4, முதலிகே மாவத்தை,
கோட்டை, கொழும்பு - 1


கிளை:

இந்திராணி ஏஜென்ஸி
நெல்லியடி, கரவெட்டி.

Licence No. 616

[412]

## 90ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



### கந்தசாமி சண்முகசுந்தரம்

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 18. 02. 1945 | 05. 02. 1989 |

எம் அன்புத் தெய்வமே...

அன்பின் திருவுருவாய் அறிவின் சுடரொளியாய் பாசத்தின் பிறப்பிடமாய் விளங்கிய எம் குல தெய்வமே நம் குலத்தவமே சோகக் கடலில் எமைத் தத்தளிக்க விட்டு எங்கு சென்றீர்கள்? இனிய மலராக எம் இதயத்தில் குடி கொண்டீர்கள். இன்று இதயத்து முள்ளாக எமை விட்டு எங்கு சென்றீர்கள்? உங்கள் குரலினிமை கேட்டு உள்ளம் கனிந்திருந்தோம் எமக்கெட்டாத தூரத்தில் உங்கள் குரலோசை அடங்கியதோ உங்கள் அன்பான அம்மா, சகோதரர்கள், மனைவி, மக்கள், மருமக்கள், மாமா, மாமி, மைத்துனர்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரையும் ஆறாத்துயரில் மீளாமல் ஆழ்த்திவிட்டுச் சென்ற புனித ஜோதியே உங்களுக்கு நமது கண்ணீர் புஷ்பங்களை காணிக்கையாக சமர்ப்பிக்கிறோம்.

நீங்கள் மரணிக்கவில்லை...
என்றும் எம்மோடு...
எம் இதயத்தோடு...

மனைவி, மக்கள், தாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
[illegible]

## குருநகரில் தண்ணீர்த் தாங்கி

குருநகர், மே 05

ஆஸ்திரேலிய உதவியுடன் ஒரு லட்சம் ரூபா செலவில் 8 ஆயிரம் கலன் நீர் கொள்ளும் தண்ணீர்த் தாங்கி குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஆலயச்சுற்றாடல், பாடசாலை, சனசமூக நிலையம் குருநகர் ஐக்கிய முன்னணி நிலையம், கடற்கரை பகுதி மக்களுக்கு இதன் ஊடாகத் தண்ணீர் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை பங்குத் தந்தை வண- பிதா பி.எம். இம்மனுவேல் மேற்கொண்டு வருகிறார். (ச-51)

## A/L 89 DAY CLASS

**Chemistry -**
அயன் சமநிலை

திரு. சிவசோதி B.Sc.

ஆரம்பம்:
5. 5. 89

(சி/2430)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பதிவாளர் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிடமிருந்து விண்ணப்பங்கள் 1989 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 திகதிவரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/ ரூபா செலுத்தி இப்பல் கலைக் கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக் கிளையிலிருந்து பெறக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்தல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விவரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையை 20x10 ச. மீ அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் எடுத்து சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப் படுவர்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபையிலுள்ள விண்ணப்பதாரி அவரின் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்

துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1989-04-28

(ஓ/2440)

## பெயர் மாற்றம்

இதுவரை காலமும் பீமனகெ சிறிசேன அசோக் பெரேரா என வழங்கிவந்த எனது பெயரை, 01-01-1989 தொடக்கம் சிறிசேன அசோக்குமார் என மாற்றிக்கொண்டேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

சிறிசேன அசோக்குமார்

கருகம்பனை றோட்,
கீரிமலை.

(418)

## வெளிவந்துவிட்டது!

புதிய உயர்தர விலங்கியல் பகுதி 111
ஒப்பீட்டு உடலமைப்பியலும்
உடற்றொழிலியலும்
கரப்பான் - தேரை - மனிதன்

✶ குருதிச் சுற்றோட்டத் தொகுதி
✶ நிணநீர்த் தொகுதி

ஆக்கியோன்:

எஸ். செல்வநாயகம்
B. Sc. (Cey) Dip. Ed.

✶ பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.

[414]

## BRIGHT TRAINING CENTRE

க. பொ. த உயர்தர வர்த்தக, கலை, மாணவர்கள் நன்மை கருதி பிரபல விரிவுரையாளர்களாலும், ஆசிரியர்களின் கூட்டு முயற்சியாகவும் வெளிவருகிறது.

'அறிவொளி'
கல்வி வெளியீடு

இதற்கென BRIGHT STUDY CIRCLE எனும் கல்வி வட்டம் ஒன்றும் மாணவரிடையே ஆரம்பிக்கப் படுகின்றது கல்விவட்டத்தைப்பற்றி அறியவிரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

அறிவொளி
பிறைட் பயிற்சி நிறுவனம்,
த பெ. இல. 162.
கொழும்பு.

(308)

## நன்றி நவிலல்

எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு
என்றுமே நீங்காத நினைவுறுத்தி
இவ்வுலக வாழ்வினை நீக்கி 26-4.89 இல்
இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

**திருமதி இன்னுமணி துரைரத்தினம்**

அவர்களின்

மரணச் சடங்கில் கலந்துகொண்டு துயர் கூறி நின்று ஆறுதல் கூறி அளப்பரிய உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது அன்பு கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

'அருள்பதி'
மானிப்பாய் தெற்கு.

(417)

## 90 ஆம் நாள் நினைவுகள்

(1989-05-05



### திருமதி தேவராணி - முருகதாஸ்
(பேபி)

| ஈழ மண்ணில்: | ஈழவர் இதயங்களில்: |
|---|---|
| 1963 - 02 - 13 | 1989 - 02 - 05 |

மாறாத அன்பில் எம்மை
மகிழ வைத்து
எம் மக்களின்
சமூக பொருளாதார மாற்றத்திற்காய்
செயற்பட்ட நீ
திடீரென மீளாத்துயில் கொண்டது ஏனோ?
எம் அன்புச் செல்வமே பேபி
உம் எழில் முகத்தை
இனி எப்போ காண்போம்
உமது பிரிவால்
நிலைகுலைந்து நெக்குருகி வாடும்:

கணவர், பெற்றோர்,
மாமன்மார், மாமிமார், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உறவினர்,
நண்பர்கள், தோழர்கள்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

(10818)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

**பொருள்:**

கள்ளுண்டு மயங்கினவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல், நீரின்கீழ்] மூழ்கின ஒருவனைத் தீவிளக்குக் கொண்டு தேடினாற் போன்றது.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073

05 - 05 - 1989 க. பெ. இல: 23


## ஒட்ட நறுக்க அனுமதியேல்

தென்னிலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள், எதிர்பார்க்கப்பட்டதுபோல இம்மாதம் பத்தாம் திகதியும் திறக்கப்படுமா என்ற சந்தேக நிலை உருவாகியுள்ளது: முன்னர் ஒப்புக்கொள்ளப்பட்டதுபோல, நிர்ணயிக்கப்பட்டதுபோல ஆறு பல்கலைக்கழகங்களையும் பத்தாம் திகதிபே திறப்பதற்கு உயர்கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் விடாமுயற்சி செய்து வருகிறார். அதன் பொருட்டு அவர் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடன் இன்று பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்கள் கடந்த சுமார் ஒன்பது மாத காலமாக மூடப்பட்டுக்கிடக்கின்றன. குழப்பங்கள், வன்செயல்கள், மாணவர் அமைதியின்மை அரசின் பதில் நடவடிக்கைகள் எனப்பலவாறாக, விட்டு விட்டு நடந்த மூடுவிழாக்களுக்கு காரணம் காட்டப்பட்டன.

புதிய அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னரே உயர்கல்வி அமைச்சராகப் பதவி ஏற்பதற்கு முன்னரே, பல்கலைக்கழகத் தகராறு விடயத்தைக் கையாண்ட ஜனாப் ஹமீத், பலவித முயற்சிகளின் பின்னர் ஒரு சமரச நிலையை ஏற்படுத்தினார். அரச தரப்பில், விட்டுக்கொடுக்கும் நியாய சிந்தையுடன் பணிபுரிந்து பல்கலைக்கழகங்களைத் திறக்கத் திகதி நிர்ணயித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் "காணாமற் போகிறார்கள்" என்ற புதிய தடைக்கல் ஒன்று வந்து விழுந்து தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களின் கதவுகளைத் திறக்க ஒண்ணாது தடுத்து நிற்கிறது இப்போது!

தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களின் நிலை, இப்படிப் பரிதாபத்துக்கு உரியதாக இருக்கும்போது, தமிழ்ப் பகுதிகளில், வடக்கு-கிழக்கில், உள்ள இரண்டு பல்கலைக்கழங்களும் தொடர்ந்து இயங்கியே வந்தன. பெரும் இராணுவத் தாக்குதல்களுக்கு மத்தியிலும், சில கால இடைவெளி தவிர்த்து இயங்கி வந்த பெருமைக்கு உரியவை அல்லவா அவை?

எனினும் "கண்ணூறு" பட்டது போல, திருஷ்டி பட்டது போல, மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் கடந்த ஒரு வாரமாக மூடப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் ஒரு வாரத்துக்கு வகுப்புகளைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளனர்.

மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தில் தகராற்றுக்குரிய காரணங்கள் மாணவர்களின் வதிவிடக்கோரிக்கையும், அதனைப் பெறும் பொருட்டு அவர்கள் மேற்கொண்ட சில "போராட்ட" முறைகளுமாகும்.

இந்தப் பிரச்சினை இலகுவில் தீர்த்துவைக்கக் கூடியது. நிர்வாகமும், மாணவர்களும் புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்து நடந்தால் சமரசம் உண்டாகும்; பிரச்சினை தீர்ந்துவிடும். அப்படியே இரு சாராரும் சமரசத்துக்கு வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகராறு ஏனைய இடங்களைப் போல, மாணவர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையேயானதல்ல. மாணவர்கள் படும் கஷ்டங்களை அடிப்படையாகக் கொண்டவை.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கண்டபடி கைது செய்யப்படுதல், சித்திரவதை செய்யப்படுதல், எழுந்தமானமாகக் கொலை செய்யப்படுதல்—

தங்களுக்கு, தங்கள் உயிருக்கு எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்ச உணர்வுடனும், மனப்பிராந்தியுடனும், பீதியுடனும், பதற்றத்துடனும் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் செல்ல வேண்டிய நிலை; கல்வி கற்க வேண்டிய நிலை — இவையே மாணவர்களின் கஷ்டங்கள்.

தமது கல்வியைத் தடையின்றி, மனப்பயம் இன்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாணவர் தூதுக்குழு ஒன்று, உயர்கல்வி அமைச்சர் ஜனாப் ஹமீத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளது.

மிக நெருக்கடியான காலங்களிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இயங்கியது. அங்கு பயிலும் மாணவர்களின் கல்விக்கு எந்தப் போர்வையிலும், எவரும் தடைபோடுவதை அல்லது முட்டுக்கட்டை நாட்டுவதை அனுமதிக்க முடியாது.

பல்கலைக்கழகப் பிரதேசம் அமைதிப் பிரதேசமாக்கப்பட வேண்டும். மாணவர்கள் மன அமைதியுடன் தமது கல்வியைப் பெற வசதி செய்யப்பட வேண்டும். எவரும் எந்த நொண்டிச் சாட்டைக் கூறிக் கொண்டாவது, மாணவர் கல்விக்கு குந்தகம் விளைவிக்காமல் பார்த்துக் கொள்வது பல்கலைக்கழக நிர்வாகம், அரசாங்கம் உட்பட சகல தரப்பாரினதும் பொறுப்பாகும். அந்த நடவடிக்கை, இந்தச் சந்தேகம் என்று தமிழர் சந்ததியின் கல்வி வளர்ச்சியை ஒட்ட நறுக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

### மானிப்பாய் மகளிரில் நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், மே 5

அநு. வை. நாகராஜனின் காட்டில் ஒரு வாரம் (சிறுவர் நவீனம்) மூன்றாவது அறிமுக அரங்கு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி உயர்நிலை மாணவ மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் அறிமுக அரங்கிற்கு கல்லூரி அதிபர் திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் தலைமை வகிப்பார்.

யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் நூலைத் திறனாய்வு செய்வார். (ச)

## பேச்சுக்கள் ஆரம்பம்

ஜகார்த்தா, மே 04

கம்பூச்சியத் தகராறுக்குத் தீர்வு காணும் பேச்சுக்கள் இந்தோனேஷியத் தலைநகரில் நேற்று ஆரம்பமாகின.

கம்பூச்சியப்பிரதமர் ஹுன் சென், கிளர்ச்சி அமைப்புக்களின் தலைவர்கள் சார்பில் இளவரசர் நொரடோம் சிஹானூக்ஆகியோர் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

இதனிடையில் கம்பூச்சியாவின் பெயரை கம்போடியா என பிரதமர் ஹுன்சென் அறிவித்தார். (எ)

## நியமனம்

ஆந்திர மாநில இந்திரா காங்கிரஸ் தலைவராக டாக்டர் சென்னரெட்டி நியமிக்கப்பட்டார்,

கட்சித் தலைவர் என்ற முறையில் பிரதமர் ராஜீவ் காந்தி இந்த நியமனத்தைச் செய்ததாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. எஸ் கே. சிங் தெரிவித்தார் (எ)

## காபூல் அரசு உறுப்பினர் கொலை

ஆப்கனில் ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் ஒருவரை ஆப்கன் கெரில்லாக்கள் கொன்றனர் என்று காபூல் வானொலி நேற்று அறிவித்தது.

இறந்தவர் ஜலால் கலில் குர்ஸோ என்று அடையாளம் காணப்பட்டது. (எ)

## தமிழ்நாடு காங்கிரஸ் தகராறு

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவராக திரு. வாழப்பாடி ராமமூர்த்தி நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மூப்பனார் கோஷ்டியைச் சேர்ந்த 12 எம்.பிக்கள் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினர்.

ராமமூர்த்தி நியமனத்தை ரத்துச் செய்யும்படி இந்த எம். பீக்கள் பிரதமரைக்கேட்டனர். இக்குழுவிற்கு இணை அமைச்சர் ப. சிதம்பரம் தலைமை வகித்தார். (எ)

பி. எல். ஓவுக்கு அங்கீகாரமளித்தால்

# நிதி உதவியை நிறுத்தப் போவதாக ஐ.நாவுக்கு அமெரிக்கா பயமுறுத்தல்

ஜெனிவா, மே. 4

முழு உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளும்படி பலஸ்தீன விடுதலை இயக்கம் செய்துள்ள விண்ணப்பத்தை ஆராய்ந்து முடிவு எடுக்க உலக சுகாதார ஸ்தாபனம் அடுத்த வாரம் ஜெனிவாவில் கூடுகிறது.

ஐ. நா. ஸ்தாபனத்தின் ஓர் உறுப்பாக உலக சுகாதார ஸ்தாபனம் விளங்குகிறது. இது போன்று ஐ. நா. ஸ்தாபனத்தின் கீழ் மேலும் 24 அமைப்புக்கள் இயங்குகின்றன.

பலஸ்தீன விடுதலை இயக்கம் அண்மையில் தன்னிச்சையாக பலஸ்தீன சுதந்திர நாடு ஒன்றைப் பிரகடனம் செய்ததும் பின்னர் அந்த நாட்டின் ஜனாதிபதியாக யாசிர் அரபாத்தை தெரிவு செய்ததும் தெரிந்ததே!

அதன் பின்னர் ஐ. நாவுடன் இணைந்துள்ள சர்வதேச அமைப்புக்களில் அங்கத்துவம் பெற பலஸ்தீன விடுதலை இயக்கம் முயற்சித்து வருகிறது.

முதற்கட்டமாக உலக சுகாதார ஸ்தாபனத்தில் சேர்வதற்கான விண்ணப்பத்தை அனுப்பிவைத்து இருக்கிறது:

அந்த விண்ணப்பம் பெரும்பாலும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் ஏற்றுக் கொள்ளப்படலாம் என்ற நிலை உருவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்கா இதனைப் பலமாக எதிர்த்து வருகிறது.

பலஸ்தீன விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டால் உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு ஆண்டு தோறும் வழங்கும் நன்கொடையை நிறுத்தி விடப்போவதாக அமெரிக்கா பயமுறுத்தியுள்ளது.

இதனிடையில் ஏனைய சர்வதேச அமைப்புக்களிலும் உரிமை கோரி பலஸ்தீன விடுதலை இயக்கம் விண்ணப்பம் செய்யவுள்ளது,

ஐ. நா. அமைப்புக்கள் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு பூரண உறுப்புரிமை அளிப்பின் சகல நிதிஉதவிகளையும் நிறுத்திவிடும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதே வேளை உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு அனுப்பி வைத்துள்ள விண்ணப்பத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதனை விடுதலை இயக்கம் நிராகரித்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா.வின் கீழ் இயங்கும் 24 ஏஜென்ஸிகளுக்கும் அமெரிக்கா 50கோடி டாலர் நிதி உதவியை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது,

இந்த உதவியை அமெரிக்கா நிறுத்தி விட்டால் ஐ. நா. பொருளாதார நெருக்கடிக்கும் ஆளாகும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# ராஜீவினால் தி. மு. க. ஆட்சியை கலைத்துவிட முடியாது!

### நாஞ்சில் மனோகரன் முழக்கம்

சேலம், மே 4

சேலம் நகரில் தி. மு. க. பட்ஜட் விளக்கக் கூட்டம் நடைபெற்றது.

அதில் வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் மனோகரன் கலந்து கொண்டு பேசினார்.

அவர் அப்போது சொன்னதாவது;

தி. மு. க. ஆட்சியை எவராலும் கலைத்துவிடமுடியாது. ராஜீவ் அல்ல, அவரது பாட்டன், முப்பாட்டன் வந்தாலும் முடியாது.

கோடிக்கணக்கான மக்களால் தெரிவு செய்யப்பட்ட இந்த அரசை ராஜினாமாச் செய் என்று பைத்தியம்தான் பேசும் வேறு யார் பேசுவார்கள்?

தமிழ்நாட்டில் மனநோயாளர்கள் நடமாடுகின்றனர்.

இதில் ஒன்று செல்வி. மற்றவர் நெடுஞ்செழியன், இவர் முகவரி தெரிந்தால் சொல்லுங்கள். மூன்றாவது நபர் ராஜாராம். இவர் முகவரி தெரிந்தாலும் சொல்லுங்கள்.

தமிழ் நாட்டுக்கு காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்ட ஒருவர் காமராஜர் சிலைக்கு முதலில் மாலை அணிவிக்கவில்லை. நேராகச்செல்வியிடம் சென்றுபூச்செண்டு கொடுத்ததாகச்சொன்னார்கள்.

இவருக்கும் காமராஜருக்கும் என்ன சம்பந்தம்? மூப்பனாருக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தல் வர உள்ளது. இதில் 30-க்கு மேற்பட்ட இடங்களில் தி. மு. க. வெற்றியீட்டும். இதற்குத் தொண்டர்கள் உழைத்தால்தான் முடியும்.

அவர்களிடம் பணம்உண்டு; பாவையும் உண்டு. பணம் பாதாளம் வரையும் செல்லும்.

அவர்கள் பாவையைக்காட்டினாலும் தி. மு. க. கொள்கையில் இம்மி அளவும் குறையாது. இதை இதயத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

வர இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியைத் தேடித்தர மக்கள் உறுதிபூண வேண்டும்.

இப்படி நாஞ்சில் மனோகரன் சொன்னார். (எ)

## தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 30 பேர் பலி!

ரியோடி ஜெனரோ, மே 4

பிரேஸிலில் தங்கச் சுரங்கம் ஒன்று இடிந்து விழுந்ததால் 30 பேர் புதையுண்டு இறந்தனர்.

இச்சுரங்கம் 60 மீற்றர் ஆழமானது. அப்பிரதேசம் கடும் மழையினால் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்த விபத்து செவ்வாய் இடம் பெற்றது. (எ)

## எதியோப்பியா; 200 பேர் பலி!

அடிஸ் அபாபா, மே, 4

எதியோப்பியாவில் நேற்று நடந்த ஏழு மணி நேரச் சண்டையில் அரசுப்படையைச் சேர்ந்த சுமார் 200வீரர்கொல்லப்பட்டனர்.

இச்சண்டை எரித்திரியா மாகாணத்தில் கிளர்ச்சியாளருக்கும் அரசுப்படையினருக்கும் இடையே நடந்தது. [எ]

## பங்களாதேஷில் வீதி விபத்தில் 18 பேர் மரணம்

டாக்கா மே, 4

பங்களாதேஷில் நேற்று இடம்பெற்ற இரண்டு வீதி விபத்துக்களில் 18 பேர் உயிரிழந்தனர் 100 பேர் வரை காயமடைந்தனர்.

ஒரு பஸ் விபத்தில் 7 பேர் இறந்தனர். இன்னொரு விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். (எ)

## பஞ்சாபில் ஒரு குடும்பமே கொலை

சண்டிகார், மே 4

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் நேற்றுக்காலை பஞ்சாப் மாநிலத்தில் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்

வீட்டுக்குள் புகுந்து தாய், அவரது இரு மகள்கள், இரு மருமகள்மார், ஒரு பேர்த்தி ஆகியோரைச் சுட்டுக்கொன்றுவிட்டு தீவிரவாதிகள் தப்பிச் சென்றனர். [எ

# பிரச்சினைகளை சவாலாகக் கருதி துணிந்து செயற்பட வேண்டும்

### கனகரத்தினம் ம. ம. வித்தியாலய வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், மே. 5

"இன்றைய காலகட்டத்தில் எமது இளம் சமுதாயம் ஒரு பெரும் நெருக்கடியான பிரச்சினைகள் நிறைந்த சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. கடந்த பத்தாண்டு நிகழ்வுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டது மாணவ உலகமே. இந்த நிலையில் மாணவர்களின் வழிகாட்டிகளாக விளங்கும் ஆசிரியர்கள் பணி சிக்கலானதும் சிரமமானதுமாகின்றது. ஆனால் பிரச்சினைகள் தான் ஒரு மனிதனின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அனுபவத்துக்கும் விடப்படும் சவால்கள் எனக் கொண்டு அவற்றுக்குத் துணிந்து முகம் கொடுத்து தக்க தீர்வுகளைக் கண்டு வெற்றி கொள்வது தான் ஒவ்வொரு ஆசிரியனதும் தலையாய கடமையாகும். அந்த வகையில் ஆசிரியர்கள் தம் கடமைகளைச் சிறப்பாகச் செய்து வருவதனாலேயே இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் மாணவர்கள் தேர்வுகளில் சிறந்த பெறுபேற்றை அடைகின்றார்கள்".

கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா, நிறுவுனர் நினைவு தினம், வைரவிழா ஆகிய முக்கூட்டு விழாவிற்குத் தலைமை வகித்து அதிபர் அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. [illegible] விளக்கேற்றி விழாவை [illegible] வித்தியாலயத்தின் துணை அதிபர் திருமதி சி. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை நிறுவுனர் சௌரவ ஆ. கனகரத்தினம் நினைவுரையை நிகழ்த்தினார்.

"இலங்கைத் தமிழர்களின் கைலாச பாரம்பரியம்" என்ற தலைப்பிலான பேராசிரியரின் வரலாற்று ரீதியான ஆய்வுரை விழாவின் போது நூல் வடிவிலும் விநியோகிக்கப்பட்டது.

விழாவில் வைரவிழாச் சிறப்புரை நிகழ்த்திய திரு. க. சி. குலரத்தினம் தமது பேச்சில் "பிள்ளைகளை மனிதராக உருவாக்குவது தான் கல்வி. ஆசிரியர்களும் பாடசாலைகளும் அதற்குத்தான்.

எனது மகன் ஓ எல்லில் சிறப்பாக சித்தியடைந்தான் ஏ எல்லில் சிறப்பாக சித்தியடைந்தான் என்று கூறிப் பெருமை அடைவதிலும் பார்க்க அவன் ஒரு மனிதன் என்றுசொல்லக்கேட்பதுதான் பெருமை என்று கூறினார்.

வித்தியாலயத்தின் வைரவிழாவை ஒட்டி வெளியிடப்பட்ட வைரவிழா மலரை வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியர் திரு. சி. பொன்னம்பலம் வெளியிட்டு வைத்தார்.

வித்தியாலயத்திலிருந்து விஞ்ஞானப் பகுதியில் பல்கலைக்கழகம் புகுந்த முதல் மாணவனும் இன்றைய மத்திய கல்லூரி ஆசிரியருமான திரு. நாகரத்தினம் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

பாடசாலைக் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் சார்பிலும் பழைய மாணவர் சங்கத்தின் சார்பிலும் உரைநிகழ்த்திய கலாநிதி மோகனதாஸ் பல்கலைக்கழகக் கல்லூரிகள் அமைக்கப்படும் பட்சத்தில் கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தைக் கட்டாயம் மனதில் கொண்டிருக்கும்படி கல்வி அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

விழாவில் மாணவ மாணவியினரின் தமிழ் ஆங்கிலப் பேச்சுகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

பிரதம அதிதி மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

ஆசிரியர் திரு. க வை. தனேஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தினார். (க)

## திருநாவுக்கரசர் குருபூசை

கொடிகாமம், மே 5

கொடிகாமம் திருநாவுக்கரசு கொத்தணி மகாவித்தியாலயத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலை விடுமுறை நாளாக இருந்தபோதிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் கணிசமான எண்ணிக்கையில் பெற்றோரும் குழுமியிருந்தனர்.

கல்லூரி அதிபர் திரு. ச. சின்னத்தம்பி தலைமை வகித்தார். திருநாவுக்கரசு சுவாமியின் திவ்விய நிலைப்பாட்டை அவர் விளக்கினார்.

மாணவர்கள் நாயனாரின் தேவாரப் பண்களை பாடினர். பெற்றோர் சார்பில் புராண ஆசிரியர் புலவர் திரு. எஸ். பொன்னம்பலம் நாயனார் அருளிய தேவாரங்கள் சில வற்றை ஓதினார். (இ-75)

## மானிப்பாய் மகளிரில் அப்பர் குருபூசை

யாழ்ப்பாணம், மே 5

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கல்லூரி அதிபர் திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் தலைமையில் நடைபெற்றது.

மாணவிகள் திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்களைப் பண்ணோடு இசைத்தனர். ஆசிரியை செல்வி சிவகலை சிவப்பிரகாசபிள்ளையின் தேவார இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து திரு. கே சிவசுப்பிரமணியத்தின் திருமுறைப் பாடல்களும் இடம்பெற்றன.

ஆசிரியை திருமதி [illegible] வதி குமாரசுவாமி அப்பர் சுவாமிகளின் சரித்திர [illegible]டுகளை எடுத்துரைத்தார். (ச)

## வீரசிங்கம் வித்தியாலய மாணவர் சாதனை

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவர்கள் 1988 ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் கலை, வர்த்தகப் பிரிவில் நல்ல முடிவுகளைப் பெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 24 மாணவர்களில் 21 பேர் சித்தியடைந்துள்ளதுடன் 16 பேர் பல்கலைக்கழகம் புகும் தகைமை பெற்றுள்ளனர்.

கலைப் பிரிவைச் சேர்ந்த செல்வன் சி. மனோகரன் 263 புள்ளிகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. [க]

## அடிக்கல் நடுகை

கைதடி ஸ்ரீ மகா விஷ்ணு சனசமூக நிலையக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நிலையத் தலைவர் திரு. சீனிவாசகம் நட்டார்.

## கம்பியூட்டர் சஞ்சிகை

ஐ.டி.பி. கம்பியூட்டர் நிறுவனத்தின் மாணவர் மன்றத்தால் மாதாந்தம் வெளியிடப்படும் "கம்பியூட்டர்" சஞ்சிகையின் ஐந்தாவது இதழான மே மாத இதழ், எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிறு பகல் 11.30 மணிக்கு, யாழ்ப்பாண ஐ.டி.பி. அரங்கில் வெளியிடப்பட இருக்கிறது.



பெருநாள் காலங்களில் தாம் மட்டும் சந்தோஷமாக வாழாது பிறரையும் மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும், ஏழைகளையும், அனாதைகளையும், வழிப்போக்கர்களையும், இனபந்துக்களையும் இணைந்து அவர்களின் கஷ்ட துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்ளல் வேண்டும். அவர்களையும் குதூகலமாகக்கொண்டாட வைப்பதற்கு வசதி படைத்தவர்கள் முன்வந்து அவர்களுக்கு உதவிகள் புரிய வேண்டும். ஏழைகளின், இனபந்துக்களின் வீடுகளுக்குச் சென்று சேமம் விசாரிக்க வேண்டும். சிறுவர்கள் மீது கருணை கொள்ள வேண்டும். அவர்களுக்கு உணவு, உடை போன்றவற்றை வழங்கி அவர்களையும் தமது பிள்ளைகள் போன்று மதித்துச் செயல்படல் வேண்டும்.

ஸஹர்முடிவு: 4-21
நோன்பு திறக்கும் நேரம்: 6-20

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மல்லி கலந்த கோப்பி**

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லி கலந்த கோப்பி இப்போது 100gr. பக்கட்டுக்களில் வெளிவருகிறது.

**1 பைக்கட் விலை ரூபா 11-50**

வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

**அண்ணா கோப்பிக்கடை**
யாழ்ப்பாணம்.



# உதயன்

05 - 05 - 1989 வெள்ளிக்கிழமை



வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. பற்களுக்கு உறுதியும், வெண்மையும் கொடுப்பது

**அண்ணா பற்பொடி**

அண்ணா பற்பொடி தற்பொழுது மக்களின் வசதிக்கேற்ப 100gr பைக்கட்டுக்களிலும் வெளிவருகின்றது.

100gr. வெற்றுப் பைக்கட்டுக்களைச் சேர்த்துக் கொடுத்து இனாம் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


## சூடுபட்டவர் மரணம்

கடந்த 20 ஆம் திகதி நீர்வேலியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய ஒருவர் நேற்று யாழ் வைத்தியசாலையில் மரணமானார்.

மரணமானவர் நீர்வேலி தெற்கைச் சேர்ந்த கே சேனாதிராஜா (55 வயது) என்பவராவார். [ஒ-9]

## பரமேஸ்வரா கடைகள் திறக்கப்பட்டன

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் மூடப்பட்டிருந்த கடைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

கோண்டாவில் அமைதிப் படை முகாம் அதிகாரிகள் இந்தக் கடைகளைத் திறக்க அனுமதிவழங்கினர்.

கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து இந்தப் பகுதியில் உள்ள ஐந்து கடைகளும் உடனடியாக மூடப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டதாம்.

கடந்த புதன்கிழமை முதல் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. [ஒ-9]

## பெண்களின் எண்ணிக்கை 1கோடி 80 லட்சம்

கொழும்பு, மே 5

2,001ஆம் ஆண்டில் இலங்கை சனத்தொகையில் ஒருகோடி 80 லட்சம் பேர் பெண்களாக இருப்பர்.

2001ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை 2கோடி 18 லட்சமாக இருக்கும் என கொழும்பில் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-எ]

## மாங்குளத்தில் காற்றுடன் மழை

மாங்குளத்தில் புதன்கிழமை மாலை திடீரெனக் கடும் காற்றுடன் பலத்த மழை பெய்தது.

இக்காற்றை அடுத்து தணுக்காய் வீதியில் மூன்று வீட்டுக் கூரைகளும், மினிசினிமா ஒன்றின் கூரையும் காற்றுடன் அள்ளுப்பட்டுச் சென்றன. [ஒ-94]

## கடற்படைக்கு ரோந்துப் படகு

இலங்கைக் கடற்படைக்கு ரோந்துப்படகு ஒன்றையும் பெரிய கப்பல் ஒன்றையும் தந்துதவும்படி சீனாவுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பீகிங்கில் சீன ஜனாதிபதி யங்சங்குனிடம் இந்த வேண்டுகோளை பிரதமர் டி. பி. விஜேதுங்க சமர்ப்பித்தார்.


**இன்று ஆரம்பம்**
**PERSONAL CLASSES For PHYSICS**

ஆசிரியர்
R. சத்தியசீலன்

21, மணல்தரை லேன்
கந்தர்மடம் (யாழ்)

A L 91 ஆரம்பம்
வெள்ளி பி.ப 2.30

A/L 90 பொறியியல்
நீர்நிலையி ல் ஆரம்பம்
வெள்ளி பி.ப 3.30

விபரங்கள் நேரில்.
(சி/2453)


## செய்திச் சாரம்

### இயக்கச்சியில் மோதல்

தாளையடி, மே 5

இயக்கச்சியில் அமைதிப் படையின் முகாம் அமைந்திருக்கும் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

துப்பாக்கி வேட்டுக்களும், ஷெல் சத்தங்களும் அப்பகுதியில் கேட்டவண்ணமிருந்தன. சேதவிவரம் தெரியவரவில்லை. [ஒ-144]

### சயனைட் அருந்தி தற்கொலை

மட்டக்களப்பு, மே 5

காதலி அலரிப்பருப்பு அருந்தி தற்கொலை செய்ததாகத் தகவலறிந்த சிவில் தொண்டர் படையைச் சேர்ந்தவர் சில நிமிடங்களில் சயனைட் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் அண்மையில் நாசிவந்தீவு கிராமத்தில் நடைபெற்றது.

ஐ. கணபதிப்பிள்ளை [21 வயது] என்பவரே தற்கொலை செய்தவராவார். [ஒ-21]

### ஒரு மாதத்தில் மூன்றாவது பூமி நடுக்கம்

பீகிங், மே 4

சீனாவின் தென் மேற்கு மாகாணத்தை நேற்று பூமி அதிர்ச்சி தாக்கியது.

ஒரு மாத காலத்தில் அம்மாகாணத்தில் இடம் பெற்ற 3 ஆவது பூமியதிர்ச்சி இதுவாகும். (எ)

## கண்டாவளை உ. அ. அ. பிரிவு புதனன்று அங்குரார்ப்பணம்

தாளையடி, மே 5

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாகஉருவாக்கப்பட்ட கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கடந்த புதன்கிழமை வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் புதிய பிரிவை வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

கிளிநொச்சி அரசாங்க செயலகத்தில் நிர்வாக அதிகாரியாகக் கடமை புரிந்த திரு, சந்திரராசா அப்பிரிவின் புதிய உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ளார். (ஒ-144)

## தலைமறைவான சிப்பாயும் பனாகொட தாக்குதலில் சம்பந்தம்

கொழும்பு, மே 5

பனாகொட இராணுவ முகாம்மீது தாக்குதல் நடத்திய போது உயிரிழந்த தீவிரவாதி ஒருவர் இராணுவத்தை விட்டு சில மாதங்களுக்கு முன்னர் தலைமறைவானவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,

பனாகொட பகுதியில் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்த தேடுதலின் போது கடந்த செவ்வாய்க்கிழமை மேலும் இரண்டு தீவிரவாத சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். [ஒ-எ]

## அரசாங்கம் என்ற பதத்தை எப்படிப் பாவிக்க வேண்டும்?

### ஜனாதிபதி கூறும் விளக்கம்

கொழும்பு, மே 5

அரசாங்கம் என்ற சொல்லைப் பாவிப்பது குறித்து மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ளும்படி ஜனாதிபதி பிரேமதாஸ சகல முதலமைச்சர்களையும் கேட்டிருக்கிறார்.

இந்த நாட்டில் ஓர் அரசாங்கம்தான் உண்டு வேறு அரசாங்கங்கள் இல்லை.

இதனை மனதில் வைத்து தங்கள் மாகாண சபைகளை அடையாளம் காண முதலமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதில் தவறுதலான அரசாங்கம்' என்றவார்த்தை மக்கள் மனதில் குழப்பத்தையே ஏற்படுத்தும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா முதலமைச்சர்களுக்கு நினைவுபடுத்தினார். [ஒ-எ]

## பௌத்தபிக்கு சுட்டுக் கொலை

கொழும்பு, மே 5

அளவ்வையில் கடந்த செவ்வாய்க்கிழமை பௌத்தபிக்கு ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இறந்த பிக்கு வண. உடுகம்பொல சந்திரானந்த தேரர் என்று பின்னர் அடையாளங் காணப்பட்டது.

களுத்துறை மாவட்டத்தில் அனுரா சாந்தா என்ற 16 வயது இளைஞன் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார். [ஒ-எ]

## ஜனாதிபதி பிரேமதாஸவுடன்-..

(1ஆம் பக்கந் தொடர்ச்சி)

கொள்ளும்.

அதன்பின் முழுக்கட்டத்திலான உத்தியோகபூர்வப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். அப்பேச்சுக்கள் ஓரிரு தினங்களுக்குள் ஆரம்பமாகக்கூடும்.

இப்பேச்சுக்கள் தீவிரமாக நடைபெற்று ஆக்கபூர்வமானவையாக அமைந்திருந்தால் இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேரடியாகப் பேசும் வாய்ப்புண்டு என்று மூத்த அமைச்சர் ஒருவர் சொன்னார்.

இப்பேச்சுக்கள் இந்திய-இலங்கை உடன்படிக்கை அடிப்படையில் அமைந்திருக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்றும் இலங்கைஅரசு தனது குடிமக்களுடன் நடத்தும் பேச்சு எவ்வகையிலும்அமைந்திருக்கலாம் என்றும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருக்கிறார்.

அமைதி உடன்பாட்டின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என்றும் இந்திய அரசு இலங்கை அரசைக் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

### இந்தியாவின் விருப்பம்

இப்பேச்சுக்களில விவாதிக்கப்படுபவை யாவை என்பது குறித்தும் தமக்கு அவ்வப்போது கூறவேண்டும் என்றும் இந்தியா கேட்டுக்கொண்டிருக்கிறது.

'பேச்சுக்களில் எதுவும்இரகசியமாக வைக்கப்படமாட்டாது. இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டு ஏராளமான தனது வீரர்களைப் பலிகொடுத்ததுடன் கோடிக் கணக்கான பணத்தையும்செலவழித்து இருக்கிறது. எனவே பேச்சுக்கள் பற்றிய முழுவிவரமும் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும்' —இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னசொன்னார். [அ-எ]

## கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

இச்சந்தேகநபர்கள் தங்கியிருந்த விடுதிகளின் உரிமையாளர்களையும் பொலீஸார் கைது செய்தனர்,

விசாரணை முடிவடையும் வரை இச்சந்தேகநபர்களும் உரிமையாளர்களும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்படுவர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த முற்றுகையை குற்றத் தடுப்புப் பொலீஸ் பிரிவுத் தலைவரான சிரேஷ்ட புலனாய்வு சுப்பிரிண்டன் திரு. ஐ.ரி. கனகரத்தினத்தின் உத்தரவின் மீதுவிசேட பொலீஸ் கோஷ்டி நடத்தியது. [ஒ-எ]

## சர்வதேச....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்ட இடைக் கால நிர்வாகம் என்ற யோசனையை அமுல் நடத்த வேண்டும். முறைப்படியான தேர்தல் ஒன்று நடத்தப்படும் வரை இடைக்கால நிர்வாகம் இருக்க வேண்டும்.

★ மாகாண சபை குறித்து அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை இலங்கை அரசு ரத்துச் செய்ய வேண்டும் இச்சட்டங்கள் தமிழரின் நலன்களைப் பாதுகாக்கப் போதுமானதல்ல.

★ கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படவுள்ள இணைப்புப் பற்றிய சர்வசன வாக்கெடுப்பை நிரந்தரமாகக் கைவிட வேண்டும். இந்த சர்வசன வாக்கெடுப்பு தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அப்பட்டமாக மீறுவதாக உள்ளது.

இக்கோரிக்கைகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. (அ-எ)

## திருமலை.-.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் பாதிக்கப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து தமிழ் ஊழியர் கடமைக்குக் கச்சேரி செல்ல மறுத்து வருகின்றனர்.

எனவே பிரட்ரிக் கோட்டைக்குள் தங்கியிருக்கும் சிங்கள அகதிகளை வேறு டத்துக்கு மாற்ற வேண்டும்; அல்லது கச்சேரியை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும்.

இப்படி தமிழ் ஊழியர் விடுத்திருந்த கோரிக்கையும் மாநாட்டில் ஆராயப்பட்டது.

இதை பரிசீலனை செய்த அமைச்சர் உடனடியாக பிரட்ரிக் கோட்டைக்குள் உள்ள சிங்கள அகதிகளை சீனக்குடா ஊளப்பன்பேர்க்குக்குஇடமாற்றம் செய்யும்படி பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். [ஒ-எ]

## சுழிபுரத்தில்

சுழிபுரம், மே 5

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த முருகேசு நடராசா என்பவரின் இல்லத்தில் இரவு ஏழு மணி அளவில் மூன்று பேர் கொண்ட கோஷ்டியினர் துப்பாக்கி சகிதமாகச் சென்று நகைகளைக் கொள்ளை அடித்துள்ளனர்.

இவர்கள் வீட்டில் இருந்த மூவரைப் பணயம் வைத்து திருமதி நடராசா மூலமாக வீட்டுக் கதவுகளைத் திறந்து தாலிக்கொடி, காப்பு, சங்கிலி, தோடு ஆகிய நகைகளைக் கொள்ளைஅடித்துச் சென்றுள்ளனர். (ஏ-28)

## மின்னல் தாக்கி வீடு எரிந்தது!

பச்சிலைப்பள்ளி, மே 5

மின்னல் தாக்கியதால் வீடு ஒன்று முற்றாக எரிந்து சாம்பராகியது. இதனால் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து சாம்பராகின.

அண்மையில் நடைபெற இருந்த திருமணத்திற்காக வாங்கப்பட்ட கூறைச் சேலையும் எரிந்து கருகிவிட்டது.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை பகல் இந்திராபுரம் என்னும் இடத்தில் இடம் பெற்றது. [ஒ-117]

## கிணற்றில் விழுந்து மரணம்

பலாலி, மே 5

அதிகாலை வேளை தோட்ட வேலைக்காகச் சென்ற விவசாயி கிணற்றில் தவறி விழுந்து மரணமானார்.

இச்சம்பவம் அச்சுவேலியில் உள்ள வண்ணகிராய்த் தோட்டவெளியில் நடந்துள்ளது.

இறந்தவர் இராமர் சீராளம் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-119]

## கடலுக்குச்சென்ற மீனவரைக் காணவில்லை

தாளையடி, மே 5

வடமராட்சி கிழக்கு ஆழ் கடலில் வெளியிணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட படகில் மீன்பிடிக்கச் சென்றகுடும்பஸ்தர் ஐந்து நாட்களாகியும் [புதன்கிழமையுடன்] கரை திரும்பவில்லை.

வடமராட்சி கிழக்கில்உள்ள உடுத்துறையைச் சேர்ந்த துரை என அழைக்கப்படும் குடும்பத்தவரே மீன் பிடிக்கச் சென்று இதுவரை கரை திரும்பாதவராவார். (ஒ 144]

## இ.போ.ச. பஸ் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 5

கடந்த முதலாம் திகதி கோண்டாவில் டிப்போவில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட இ. போ. ச. பஸ் பொற்பதி வீதியில் கைவிடப்பட்ட நிலையில் இந்திய அமைதிப்படையினரால் மீட்கப்பட்டு கடந்த புதன் கிழமை கோண்டாவில் டிப்போ முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது,

பஸ்ஸைக் கடத்திச்சென்றவர்கள் இந்திய அமைதிப் படையினரைக் கண்டதும் அதனை விட்டுவிட்டு ஓடியதாக அமைதிப்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (க)

## இன்று

யாழ்ப்பாணம், மே 5

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை யாக பூஜை ஆரம்பமாகி நாளை சனிக் கிழமை பகல் 11 மணிக்கு மகா சங்காபிஷேகம் நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை பி. ஏ. தம்பி ஒழுங்கையில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் இன்று வெள்ளி காலை 9-30 மணி முதல் சதசங்காபிஷேகமும் விசேட பூஜை வழிபாடும் நடைபெறுகிறது.

அதைத் தொடர்ந்து விசேட நிகழ்ச்சியாக "பைரவர் தத்துவம்" பற்றி திரு. கனகசபாபதி நாகேஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும் சங்கீத பூஷணம் திரு. நா. வி. மு. நவரத்தினத்தின் திருநெறிய தமிழிசைக் கச்சேரியும் இடம்பெறும். (அ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. வை. மு. பஞ்சலிங்கம்

[அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்]

திரு. வை. மு. பஞ்சலிங்கம் அவர்கள் 01-05-1989 அன்று அகால மரணம் அடைந்தார்.

அன்னார் திருமதி கணேஸ்வரி (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், கீதாஞ்சலி (பொறியியல் விரிவுரையாளர், Purdue University, America), கிருஷ்ணாஞ்சலி (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வை. முத்தையா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மா. கனகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி சத்தியலட்சுமி இளையதம்பி, திருமதி பத்மாவதி சீனித்தம்பி, திரு. மகாரட்ணம், திருமதி மங்கையற்கரசி வாமதேவன், திரு. ' ரந்தாமன், திரு. யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திருமதி இராஜேஸ்வரி சிவப்பிரகாசம், திருமதி மகேஸ்வரி பரமசாமி, செல்வி யோகேஸ்வரி கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை 06-05-1989 சனிக்கிழமை காலை எட்டு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கோம்பையன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் பத்தரை மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. வை. மு. யோகேஸ்வரன்

அரச அதிபரின் வாசஸ்தலம்
[Residency], ஆனைக்கோட்டை. [C/2452]

### திருமதி செல்லையா விசாலாட்சி

வண்ணார்பண்ணை, கலட்டியைச் சேர்ந்த திருமதி செல்லையா விசாலாட்சி காலமானார்.

இவர் காலம் சென்ற S. T. செல்லையாவின் (H.M. Customs) அன்பு மனைவியும், காலம் சென்ற மாணிக்க வாசகர் பொன்னுத்துரை [கந்தரோடை], காலம் சென்ற இராசம்மா [வட்டுக்கோட்டை] ஆகியோரின் அன்பு மகளும், கணேஷன், காலம் சென்ற மகேஸ்வரன், தர்மதாசன், தர்மாவதி, தேவராணி ஆகியோரின் தாயாரும். லீலா, சின்னத்தங்கச்சி, கமலா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 05 - 05 - 89 இன்று வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு மணியகாரன் ஒழுங்கை, வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

தகவல்:
T. C. கணேஷன்

[427]

### திரு. இராமர் சீராளம்

அச்சுவேலி தெற்கு, அண்ணா வீதியைச் சேர்ந்த இராமர் சீராளம் மரணமானார்.

இவர் காலம் சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், சிவலிங்கம் [ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன் மேஜர்], காலம் சென்ற குலசிங்கம் [காசாளர்], சித்திரவேல் [பொது பதிகாரி. பொலீஸ் நிலையம் - வெல்லாவெளி], இராமசாமி [தருமராசா மர அரிவு ஆலை, அரசடி - யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற சின்னத்தம்பி, இலட்சுமி, காலம் சென்ற சிவனடியார், மார்க்கண்டு [அண்ணாவியார்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், சி. மட்சகேந்திரன் [சிவன் மாளிகை உரிமையாளர், அச்சுவேலி], திருமதி திரவியம் இராசையா ஆகியோரின் சிறிய தகப்பனும், டாக்டர் மா. குழந்தைவேலு [பிரித்தானியா], மா. கணேசன் [ஜேர்மனி] ஆகியோரின் பெரிய தகப்பனும், லதா, வசந்தா, சிவாகரன், பத்மா, சசிபேபி, மகிமதாஸ், ஜலசன், டட்லி, கயல்விழி, சுமதி, காந்தி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06 - 05 - 89 சனிக் கிழமை காலை பத்து மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சிவலிங்கம்.

(சி/2454)

### நாகராசா தெய்வேந்திரம்

[யாழ். பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவன்]

யாழ். பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவன் நாகராசா தெய்வேந்திரம் காலமானார்.

இவர் நாகராசா - கமலம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், நிர்மலதாசன் [ஜேர்மனி], சிவநேசன், யோகநாயகி, பேரின்பநாயகி, சசி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். ஈமக்கிரியைகள் 05-05-1989 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு காவலூரில் நடைபெறும்.

தகவல்:
ஆ. நாகராசா
(தந்தை)

கிழக்கு வீதி,
ஊர்காவற்றுறை. [425]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் [illegible] 05 — 05 — 1989 இல் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org